# Salve Regina

Ave Maria

SOCIETY OF ST. PIUS X

ஜுன்-ஜுலை 2008

மலர்: 3 இதழ்: 5

(தனிச்சுற்றுக்கு மட்டும்)




"... இன்னும் சில வருடங்களில் – எத்தனை ஆண்டுகள் என்று நான் அறியேன்; பாரம்பரியம் உரோமையில் தனது உரிமைகளை பெற்றுக்கொள்வதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்பது நல்ல ஆண்டவருக்குத் தெரியும் – உரோமை அதிகாரிகளால் நாம் தழுவிக்கொள்ளப்படுவோம். நமது குருமடங்களில், துறவற மடங்களில், குடும்பங்களில், சமுதாயத்தில், நாடுகளில், சர்வேசுரனின் அதிமிகு மகிமைக்காகவும் ஆத்துமாக்களின் இரட்சணியத்திற்காகவும் விசுவாசத்தைக் காப்பாற்றியதற்காக அவர்கள் நமக்கு நன்றி செலுத்துவார்கள்."

– ஜுன் 30, 1988 அன்று மேற்றிராணிமார்களின் அபிஷேகத்தின்போது வந். லெஃபவர் ஆண்டகை அவர்கள் நிகழ்த்திய பிரசங்கம்.

சேசுக்கிறீஸ்துநாதரில் அன்பார்ந்தவர்களே,

## "காப்பாற்றப்பட முயற்சி" – 20–ம் ஆண்டு நிறைவு !

*சரியாக இருபது ஆண்டுகளுக்கு முன்பாக 1988 ஜுன் மாதம் 30-ம் நாள் மறைந்த வந்திக்கத்தக்க மேற்றிராணியார் மார்சல் லெஃபவர் ஆண்டகை காப்பாற்றப்பட முயற்சி என்ற அறைகூவலில் 4 மேற்றிராணிமார்களை அபிஷேகம் செய்தார். கத்தோலிக்கத் திருச்சபையை உண்மையாகவே நேசிப்பவர்கள், அதன் நலனைத் தேடுபவர்கள், இதனை அறிந்திருந்தால், அதற்காக சர்வேசுரனுக்கு அவருடைய பிரமாணிக்கமுள்ள ஊழியரான லெஃபவர் ஆண்டகைக்க நன்றி கூறத் தவறமாட்டார்கள்.*

**"Tradidi quod et accepi" - "... நான் பெற்றுக்கொண்டதையே உங்களுக்குக் கையளித்தேன்"** *(1 கொரி. 11:23) என்ற அர்ச். சின்னப்பரின் வார்த்தைகளை தனதாக்கி செயல்படுத்திய இந்த ஊழியர் திருச்சபையைப் பிளவுபடுத்துவதற்காக அல்ல; ஆனால் அது தொடர்வதற்காக - அதன் பாரம்பரிய விசுவாசத்தை காப்பாற்று வதற்காகவே - ஆத்துமங்களின் இரட்சணியத்தையே நோக்கமாகக் கொண்டு மேற்றிராணியார்களையும், குருக்களையும் ஏற்படுத்தினார். ஆனால் அவரை தவறாகப் புரிந்துகொண்ட பலர் இவரை அநீதியாகக் கண்டனம் செய்தார்கள். இவரது நற்பெயரை உதாசீனப்படுத்தி, "எதிர்ப்பாளர்" என்று தூற்றி திருச்சபை "விலக்கம்" செய்து வெறுத்து ஒதுக்கினார்கள். சிலர் அவர் ஏற்படுத்திய அர்ச். 10-ம் பத்திநாதர் குருக்கள் சபையை பழித்து பகைத்தார்கள். அதன் எதிர்காலத்தைத் தீர்ப்பிட்டார்கள். அச்சபை வளர்ச்சி அடையாது, சிதறிப் போய்விடும் ஸ்தாபகரின் மரணத்திற்குப் பிறகு அவருடைய வழியைப் பின்பற்ற மாட்டார்கள் என்றெல்லாம் ஏளனம் செய்தார்கள். ஆனால் இன்றையே உண்மை நிலையே வேறு! அதிமேற்றிராணியார் மறைந்த நேரத்தில் இச்சபைக் குருக்களின் எண்ணிக்கை 200-க்கும் குறைவு ஆனால், இன்று சுமார் 480-க்கும் மேலாக உள்ளன. சபைக்குருக்கள் இல்லம் உலகெங்கிலுமாக 76-ல் இருந்து 154 ஆக உயர்ந்திருக்கிறது! நீதி நிலைநாட்டப்படும் நாள் வந்தே தீரும்! அப்போது திருச்சபை வந். லெஃபவர் ஆண்டகையின் உன்னதமான தைரியமான வீர வைராக்கிய செயலை அங்கீகரித்து, அச்செயலுக்காக அவரை பீட வணக்கத்திற்கு உரியவராக உயர்த்தும் என்பது உறுதி!*

## 16–ம் ஆசீர்வாதப்பரின் 'Motu Proprio' – முதல் ஆண்டு நிறைவு !

*இந்த ஜுலை 7-ம் தேதியுடன் பாப்பரசர் 16-ம் ஆசீர்வாதப்பரின் தன்னிச்சையான ஆணை மடல் வெளியிடப்பட்டு ஒரு ஆண்டு நிறைவு பெற்றது. இந்த முதலாம் ஆண்டையொட்டி தமிழ்நாட்டிலுள்ள அனைத்து குருக்களுக்கும், திரிதெந்தீன் லத்தீன் பூசையை நிறைவேற்றுவது எப்படியென்பது பற்றிய விளக்க டிவி.டி. வினியோகிக்கும் திட்டம் படிப்படியாக இந்தியாவில் உள்ள அனைத்து கத். குருக்களுக்கும் விரிவாக்கப்படும். இந்த கருத்துக்காக ஜெபிக்கும்படியாக வாசகர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.*

## குருத்துவ வெளி அடையாளம் !

*சுவிட்சர்லாந்து, ஜெனிவா நகரைச் சார்ந்த அர்ச். 10-ம் பத்திநாதர் குருக்கள் சபையின் குரு ஒருவர் சமீபத்தில் உரோமைக்குச் சென்றார். இம்முறை குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் கண்டார். அது என்னவெனில், குருத்துவ மற்றும் துறவற உடை அணிந்து செல்லும் குருக்கள் துறவியரின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதே அது! இந்த காரியம், உரோமை நகர் கத்தோலிக்கர்களிடம் மட்டுமல்லாமல், அஞ்ஞான சுற்றுலா பயணிகளின் மனதிலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. வந். லெஃபவர் ஆண்டகை குறிப்பிடுவது போல குருத்துவ உடையானது குருக்களுக்கு, தான் யார் என்பதை - அதாவது அவர் உலகத்தைத் துறந்தவர், தேவ ஊழியர் என்பதை நினைவுபடுத்துகிறது. மற்றவர்களுக்கோ அது சுபாவத்திற்கு மேலான உண்மைகளை, காரியங்களை நினைவூட்டுகிறது. நவீன குருக்கள் ஞான அடையாளமாகப் பயன்படும் குருத்துவ உடையின் அவசியத்தை உணர்ந்து, அது விசுவாசிகளுக்கு விளைவிக்கும் நன்மைகளை அறிந்து மீண்டும் பாரம்பரிய குருத்துவ உடையை அணிவார்களாக.*

## நமது இரட்சணியத்தின் பிணை !


*மிக சமீபத்தில், பெரு நாட்டின் கர்தினால் ஜிவான் லூயிஸ் சிபரியானி ஆண்டகை அந்நாட்டு விசுவாசிகளை ஜெபமாலை ஜெபிக்குமாறும், கார்மெல் உத்தரியம் அணியுமாறும் வலியுறுத்தினார். ஒரு கையில் ஜெபமாலை யையும், மறுகையில் உத்தரியத்தையும் ஏந்தி மற்றவர்களுக்கு பரப்புங்கள் என்று கேட்டுக்கொண்டார். இது மிகவும் ஊக்கம் தரும் - ஆறுதல் கொடுக்கின்ற செயல்! குருக்களுக்கு எப்படி குருத்துவ உடை ஒரு வெளி அடையாளமாக இருக்கிறதோ, அதுபோலவே உத்தரியம் மாதாவின் பிள்ளைகளின் வெளி அடையாளமாக இருக்கிறது. இம்மாத இதழில் விசுவாசிகள் பயனடையும் வகையில் ஒரு சிறு கட்டுரைத் தரப்பட்டுள்ளது.*

(8–ம் பக்கம் பார்க்க . . .)

# "ஒருநாள் ஜெபமாலையையும், உத்தரியத்தையும் கொண்டு தேவமாதா உலகத்தை இரட்சிப்பார்கள்"

– அர்ச். சாமிநாதரின் தீர்க்கதரிசனம்!

கத்தோலிக்க விசுவாசம் தழைத்தோங்கிய மத்தியக் காலக் கட்டத்தில், உரோமையில் மூன்று தேவ ஊழியர்கள் சந்தித்துக்கொண்டார்கள். போதக சபையின் ஸ்தாபகரான அர்ச். சாமிநாதர், சுவிசேஷ தரித்திரத்தை வாழ்வாகக் கொண்ட அர்ச். பிரான்சிஸ் அசிசி, தமது பிரசங்கத் திறமைக்காக உரோமைக்கு அழைக்கப்பட்ட பாலஸ்தீன நாட்டு கார்மெல் சபை துறவி அர்ச். ஜெருசலேம் ஆஞ்சலூஸ் ஆகியோரே அவர்கள்.



அர்ச். சைமன் ஸ்டாக் மாதாவிடம் உத்தரியம் பெறுகிறார்

முன்பின் எந்தவிதமான அறிமுகம் இல்லாத போதிலும் இஸ்பிரீத்துசாந்துவானவரின் ஒளியில் ஒருவர் மற்றவர்கள் யார் என்பதை அறிந்துகொண்டார்கள். இவர்கள் சந்தித்து உரையாடிக்கொண்டிருக்கும்போது, ஒருவர் மற்றவரை நோக்கி தீர்க்கதரிசனம் கூறலானார்கள்! அர்ச். ஆஞ்சலூஸ் அர்ச். பிரான்சிஸ் அசிசியார் பெறவிருக்கும் ஐந்து காயங்களால் நமதாண்டவரின் பாடுகளில் பங்கேற்கவிருப்பதையும் அறிவித்தார். அர்ச். சாமிநாதரோ கார்மெல் சபை துறவியை நோக்கி, **"சகோதரரே ஒருநாள் பரிசுத்த கன்னிமாமரி உங்கள் சபைக்கு உத்தரியம்** என்ற ஒரு பக்தி முயற்சியை வழங்குவார்கள். எங்கள் சபைக்கோ ஜெபமாலையை கொடுப்பார்கள். ஒருநாள் ஜெபமாலையையும் உத்தரியத்தையும் கொண்டு அவர்கள் உலகத்தை இரட்சிப்பார்கள்" என்று கூறினார்.

மேற்கூறிய தீர்க்கதரிசனம் நிறைவேறும் வகையில் நம் தேவமாதா உத்தரியம் என்ற விலைமதிப்பில்லாத பொக்கிஷத்தை கார்மெல் சபைக்கு வழங்கினார்கள். அது எப்படியெனில், 1238-ல் கார்மெல் சபை மிகுந்த சோதனைக்குள்ளாகியது. சூழ்ந்து வந்த துன்பங்களில் சபை நீடிப்பதே பெரும் சிரமமாகிப்போனது. எலியாஸ் தீர்க்கதரிசியால் பாலஸ்தீன நாட்டில் கார்மெல் மலையில் தோற்றுவிக்கப்பட்டு காலம் காலமாக அங்கே ஜெப தபத்திலும், தேவதாயை புகழ்வதிலும் ஈடுபட்டு வந்த அச்சபை துறவிகள் சிலுவைப்போரின் போது முகமதியர்களால் நாடுகடத்தப்பட்டு விரட்டப்பட்டார்கள். அதனால் ஐரோப்பிய நாடுகளுக்கு குறிப்பாக இங்கிலாந்து நாட்டிற்கு வந்த அவர்கள் பெரும் அவதிக்குள்ளானார்கள். புதிய இடம், புதிய காலநிலை என்ற நிலையில் எந்தவிதமான உதவியுமின்றி அலைந்து திரிந்துகொண்டிருந்தார்கள். அதனால் ஞான இருள் சூழ்ந்து தங்கள் தேவ அழைத்தல்களையே இழந்து விடும் அபாயத்தில் அத்துறவிகள் உழன்று வந்தனர்.

அச்சபையின் (இங்கிலாந்து நாட்டு) சிரேஷ்டராக இருந்த அர்ச். சைமன் ஸ்டாக் தனது சபையின் நிலைகண்டு பெரிதும் வருந்தி கார்மெல் கன்னிகையான மரியாயிடம் மன்றாடினார். அவர்களுடைய அன்பின் அடையாளத்தை, மோட்ச பரிந்துபேசுதலை தந்து தமது சபையைக் காக்கவேண்டுமென்று இறைஞ்சி வேண்டினார். அவரது மன்றாட்டு கேட்கப்பட்டது.

1251 ஜுலை 16-ம் நாள் தேவமாதா ஒரு பதிலைத் தந்தார்கள். கணக்கற்ற சம்மனசுக்கள் புடைசூழ தேவபாலனோடு அர்ச். சைமன் ஸ்டாக்கிற்கு காணப்பட்டார்கள். உத்தரியத்தை கையில் ஏந்தியவர்களாய், மிகுந்த இரக்கத்தோடும், அன்போடும் அவரை நோக்கி, "இந்த உத்தரியத்தை பெற்றுக்கொள். உனக்கும், உமது சபையினருக்கும் கொடுக்கப்படும் விசேஷ சலுகை! இதை அணிந்து கொண்டு மரிக்கிறவர்கள் நித்திய நெருப்பில் விழ மாட்டார்கள். இது இரட்சண்யத்தின் ஒரு அடையாளம். ஆபத்தில் ஒரு பாதுகாப்பு, சமாதானத்தின் பிணை" என்று கூறி அதனை அவருக்குக் கொடுத்

தார்கள். உத்தரியத்தால் கார்மெல் சபை காப்பாற்றப் பட்டது. சபை துறவிகள் அதன் வல்லமையைக் கண்டார்கள். அதனால் ஞான உதவியையும், தேவமாதாவின் தப்பாத மன்றாட்டையும், பாதுகாவலையும் பெற்றார்கள். உத்தரியத்தின் வல்லமையைக் கண்டுகொண்ட திருச்சபை அதனை விசுவாசிகளும் அணிந்து, பயன்பெற அவர்களைத் தூண்டியது. அநேக பாப்புமார்கள் உத்தரிய பக்தியை ஆதரித்து அதற்கு எண்ணற்ற "ஞான பலன்களை" வழங்கியுள்ளார்கள். பாப்பரசர் 15-ம் ஆசீர்வாதப்பர் உத்தரியம் தேவமாதாவின் கவசம் என்று கூறுகிறார்.

**அர்ப்பணிப்பின் அடையாளம்!**

உத்தரியம் அணிவது தேவதாய்க்கு நமது அர்ப் பணிப்பின் அடையாளமாக இருக்கிறது. பாத்திமாவில் தமது மாசற்ற இருதயத்திற்கு அர்ப்பணமாதலைக் கேட்டுக்கொண்ட தேவமாதா 1917 அக்டோபர் 13-ம் தேதி நடந்த தமது இறுதிக்காட்சியில் உத்தரிய மாதாவாகக் கையில் உத்தரியத்தை ஏந்தியவர்களாகக் காணப்பட்டார்கள். மாதாவிற்கு அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வின் முக்கிய அடையாளம் கார்மெல் உத்தரியத்தை அணிந்திருப்பது என்பதை இதன் மூலம் சுட்டிக் காட்டுகிறார்கள். கிறீஸ்தவர்களே! நாம் சர்வேசுரனின் "சுவீகார மக்கள்" என்ற நமது அந்தஸ்தை தேவ இஷ்டப்பிரசாதம் (sanctifying grace) என்ற வரப்பிரசாத உள்ளரங்க ஆடையை அணிந்திருப்பதால் என்பிக்கிண் றோம். அதே போல, நாம் மாதாவின் மைந்தர்கள் என்ப தையும், நாம் முற்றிலும் அவர்களுக்குச் சொந்தமான வர்கள் என்பதை காண்பிக்க வெளியரங்க ஆடையாக உத்தரியத்தை அணிந்து கொள்வோம்.

மரியாயின் மாசற்ற இருதயத்திற்குச் செய்யப் படும் நிந்தைகளில், "மாதாவின் பக்திப் பொருட்களை அவமதித்து, அகற்றுவது ஒன்று" என்பதை நினைவில் கொண்டு அதற்குப் பரிகாரமாக நாம் மாதாவின் உத்தரிய பக்தியை முதலில் அநுசரிப்போம். அதனை பக்தியோடு அணிந்து நம்மை அவர்களுக்கு அர்ப்பணித்து வாழ் வோம். பின்னர் நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கு அதனை பரப்புவோம். இதனால் தேவாதாயின் பாதுகாப்பில் அடைக்கலம் கொள்வோமாக!

# பிரதான மந்திரங்களின் வியாக்கியானம்

## அருள்நிறை மந்திரத்தின் வியாக்கியானம் (தொடர்ச்சி)

**3. சர்வேசுரனுடைய தாயென்பதால், தேவ மாதாவுக்குச் சர்வேசுரனோடு உண்டான சம்பந்த மென்ன?** (தொடர்ச்சி)

(2) **பிதாவாகிய சர்வேசுரனோடும் அவளுக்கு விசேஷ சம்பந்தம் உண்டானது**. ஏனென்றால் அவருடைய பிதாத்து வத்தில் அவளும் பங்கடைந்திருக்கிறாள். பிதாவாகிய சர்வேசுரன் நித்தியமாய் ஜெனிப்பிக்கிற தேவ வார்த்தையானவரையே மனுஷாவதாரத்தில் அவளும் ஜெனிப்பித்தாள். அவள் மெய் யாகவே தேவதாயானதால், அவளும் பிதாவும் ஒரே குமாரனையே தங்கள் குமாரனென்று அழைக்கிறார்கள்.

3) **இஸ்பிரீத்துசாந்து** சகல தேவாலயங்களையும்விடத் தமக்கு ஆயிரமடங்கு அதிகப் பிரியமுள்ள தேவமாதாவின் ஆத்துமத்தில் பிதாவோடும் சுதனோடும் இறங்கி வந்தார். அவளுடைய பரிசுத்த இரத்தத்தைக் கொண்டு சுதனாகிய சர்வேசுரனுக்கு ஓர் சரீரத்தை உருவாக்கினது திரித்துவத்தின் மூன்று ஆட்களுக்கும் உரியதென் றாலும், அப்படி உருவாக்கினது இஸ்பிரீத்துசாந்துவென்று விசேஷமாய்க் குறித்துச் சொல்லப்படுகிறது. இதனால்தான் தேவமாதாவை இஸ்பிரீத்துசாந்துவின் ஞானபத்தினியென்று வாழ்த்துகிறோம்.

**4. தேவமாதா சர்வேசுரனுடைய தாயென் பதைப்பற்றிதான், அவளுக்கு மற்றச் சகல மகிமை பெருமைகளும் விசேஷ சுதந்திரங்களும் உண்டா கின்றன –**

(1) **இஷ்டப்பிரசாத ஒழுங்கில்** – அர்ச். கன்னிமரியம்மாள் சர்வேசுரனுக்குத் தாயாராயிருக்க நியமிக்கப்பட்டிருந்ததினால், சகல சம்மனசுகளையும், மோட்சவாசிகளையும்விட அதிகமாய் தேவ இஷ்டப்பிரசாதம் அவளுக்குக் கொடுக்கப்பட்டதாக முன்பே சொல்லியாயிற்று. இந்த முகாந்தரத்தினால்தான் அவள் **ஜென்மப் பாவமில்லாமல்** உற்பவித்ததுமன்றி, **எப்போதும் பழுதற்ற கன்னியாஸ்திரி**யாயிருந்து யாதொரு குற்றம் குறையின்றி, அற்ப மாசுமில்லாமல் முற்றிலும் அழகுடையவளாயிருந்தாள். மேலும் இஷ்டப்பிரசாதத்தில் எப்போதும் நிலைநின்று, **பாவஞ் செய்யக் கூடாதவளாயும்** இருந்தாள்.

(2) **சுபாவ ஒழுங்கில்** – ஓர் சிருஷ்டிக்கு அளிக்கப்படுவதற்குரிய நன்மை என்னென்னவுண்டோ, அதெல்லாம் தேவமாதாவுக்குக் கொடுக்கப்பட்டதென்று சொல்லவேண்டும். ஆதித்தாய், ஆதித் தகப்பன் ஆசாபாசமில்லாமல் இருந்ததுமன்றி அவர்களுடைய **ஐம்புலன்களெல்லாம் மேலாங்கிஷமாகிய புத்திக்குக் கீழ்ப் படிந்திருந்தது**. அவர்களைவிட அதிக மேலானவிதமாய்த் தேவதாயார் அதே வரத்தைப் பெற்றிருந்தாள். ஆனால் **கஷ்டம் துன்பமில்லாமலிருக்கவும்**, சாகாமலிருக்கவும், அவளுக்கு வரங் கொடுக்கப்படவில்லை. ஏனெனில் இவ்விஷயத்தில் மனுக்குலத்துக் காகப் பாடுபட்டு மரிக்க வேண்டியிருந்த தமது திருக்குமாரனுக்கு ஒப்பாயிருந்தாள்.

ஆதித்தாய் ஆதித்தகப்பன் சிருஷ்டிக்கப்பட்ட க்ஷனத்திலேதானே, சர்வேசுரன் அவர்களுக்குத் **தெரியவேண்டிய சகல காரியங் களின் அறிவையும் கொடுத்திருந்தார்**. தேவமாதாவுக்கோ வெனில் ஆதாமுக்குக் கொடுத்ததைவிட, மேலான அறிவை அளித்தருளினார். அவளுக்குச் சகலமும் தெரிந்திராதே போதிலும், சுபாவ விஷயத்திலும் சுபாவத்துக்கு மேலான விஷயத்திலும், தன் கிரியைகள் எல்லாம் சரியாய்ச் செய்வதற்கு அவசரமானவைகள் யாவையும் அறிந்திருந்தாள். மேலும் மனுஷசுபாவத்துக்குரிய வழிபாடுகளைப் பிரயோகித்து நாளாவட்டத்தில் புதுக்காரியங்களை அறியக்கூடியவளாயு மிருந்தாள்.

(தொடரும்)


# குழப்பத்திலிருக்கும் கத்தோலிக்கர்களுக்கு திறந்த மடல்

### - அதிமேற்றிராணியார் மிக வந். மார்செல் லெஃபவர் ஆண்டகை -

(கடந்த 42 ஆண்டுகளாக கத்தோலிக்கத் திருச்சபையில் மாற்றங்கள் செய்யப்பட்டு வருகிறது. இதனால் சாதாரண விசுவாசிகள் செய்வதறியாமல் திகைத்துபோய் உள்ளனர். அவர்களுக்கு வழிகாட்டும் விடிவெள்ளியாக அதிமேற்றிராணியார் மிக. வந். மார்செல் லெஃபவர் ஆண்டகை திகழ்கிறார். அவர் எழுதிய "குழப்பத்திலிருக்கும் கத்தோலிக்கர்களுக்கு ஓர் திறந்த மடல்" என்ற நூலின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது. இது நிச்சயமாக குழம்பிப் போயிருக்கும் கத். மக்களின் மனங்களில் எழும் சந்தேகங்களுக்குப் பதிலாக அமையும் என்பதில் ஐயமில்லை. – ஆசிரியர்)

## (7) குருத்துவ உடையின் அவசியம்!

லத்தீன் மொழியோடு காணாமல் போய்விட்ட மற்றொன்று - குருக்கள் மற்றும் கன்னியரின் பாரம்பரிய உடை! அதாவது, துறவற உடை உடுத்துவது சம்பந்தமான காரியத்திலும், எதிர்கருத்து பலமாகி வருகிறது. துறவற உடை தரித்திருப்பது என்பதை மற்ற விசுவாச சத்தியம், திருவழிபாடு இவைகளோடு ஒப்பிடும்போது அதிமுக்கியமான



ஒரு காரியம் இல்லைதான்; இருப் பினும் இது முக்கிய அடையாள மாக இருக்கிறது. இது சம்பந்தமாக பாப்பானவர் குறிப்பிடும்போது - பாப்பரசர் 2-ம் அருள் சின்னப்பர் அதிகம் வலியுறுத்தியுள்ளார் - குருக் கள் மத்தியிலிருந்து பெரிய எதிர்ப்பு ஒலி, முணுமுணுப்பு வருகிறது. இதுகுறித்து பாரீஸ் நகர பத்திரிகை ஒன்றில் ஒரு குருவானவர் குறிப் பிடும் வார்த்தைகள் இவை: "...அங்கி அணியவேண்டும் என்ற விதம் சிறுபிள்ளைத்தனமாக இருக் கிறது. அடையாளம் கண்டுகொள் ளத்தக்க உடை அணிவது அர்த்த மற்றது. ஏனென்றால் தெருவில் குருவானவரை அடையாளம் கண்டுகொள்ளத் தேவையில்லை. மாறாக அங்கியானது இடையூறாக இருக்கிறது... குருவும் மற்றவர் களைப் போல ஒரு மனிதர்தான். அவர் கூடியிருக்கும் விசுவாசிகளின் நற்கருணைக் கொண்டாட்டக் கூட்டத்திற்கு தலைமை வகிப்பவர்தான்..."

இந்த நற்கருணைக் கொண்டாட்டத்தின் தலைவர் என்ற பதம் சுவிசேத்திற்க விரோதமான கருத்தாகும். பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்ட சமுக உண்மை நிலைமைக்கு விரோதமாக இருக்கிறது. எல்லா மதங்களிலும் சமய தலைவர்களை வேறுபடுத்தி அறியக்கூடிய உடைகளை உடுத்துகிறார்கள். இஸ்லாமியரை எடுத்துக் கொண்டாலும், புத்த மதத்தினரை எடுத்துக்கொண்டாலும் அவர்கள் உடுத்தும் உடையை வைத்தே அவர்கள் எந்த மதத்தவர்கள் என்று அறியமுடிகிறது. இந்த மதங்களைச் சேர்ந்த இளம் வயதினர் தங்கள் மத அடையாளங்களை எவ்விதப் பிரச்சினையுமின்றி பகிரங்கமாக வெளிப்படுத்துகிறார்கள்.

ஒரு படைவீரனை அல்லது ஒரு காவல்துறையினரை எப்படி அவரது சீருடை அடையாளப்படுத்துகிறதோ, அதே போல ஒரு குருவானவரை - கன்னியாஸ்திரியை அவர்களுடைய துறவற உடை உணர்த்துகிறது. குடிமைத் துறையைச் (Civil Order) சார்ந்த அவர்கள் மற்றவர்களைப் போல குடிமக்களாயும் இருக்கிறார்கள். ஆனால் குருவானவரோ, கன்னியாஸ்திரியோ எந்நேரமும் குருவாகவும், கன்னியாஸ்திரியாகவுமே இருக்கிறார்கள். ஆகவே எப்போதும் துறவற உடையை அணிந்திருப்பது அவசியம். அவர் உலகத்தில் இருந்தாலும், குருத்துவ அபிஷேகத்தின்

போது பெற்றுக்கொண்ட முத்திரையின் விளைவாக, அவர்கள் உலகைச் சார்ந்தவர்கள் அல்ல. இது அர்ச். அருளப்பர் சுவிசேஷத்தில் சொல்லப்பட்டுள்ளது. "நீங்கள் உலகத்தார் இல்லாததினாலும்; நானே உலகத்தினின்று உங்களைத் தெரிந்து கொண்டதினாலும்..." (அரு. 15:19). இவர்கள் உலகத்தை சாராதவர்களாய் இருக்கிறபடியால், அவர்களுடைய உடையும் அதனைப் பிரதிபலிக்க வேண்டும். மேலும் அது அடக்க ஒடுக்கத்தினுடையவும், கற்பினுடையவும், தரித்திரத்தினுடையவும் வெளிப்பாடாய் இருக்கிறது.

இரண்டாவதாக, குரு நமதாண்டவருக்கு சாட்சி பகர வேண்டிய கடமையும் உள்ளது. "நீங்கள் எனது சாட்சிகளாக இருக்கிறீர்கள்... மரக்காலின் கீழ் மனிதர்கள் விளக்கை வைப்பதில்லை!" ஐரோப்பிய கீழை நாடுகளில் நீண்டகாலமாக அறிவிப்பதுபோல் வேதம் ஆலயத்தோடு நின்றுவிடக் கூடாது. ஆனால் கிறீஸ்துநாதர் நமக்குக் கட்டளையிட்டுள்ளது போல நமது விசுவாசத்தைப் பரப்ப வேண்டும். அனைவரும் அறிந்துகொள்ளும் படியாகவும், காணும்படியாகவும் அதற்கு வெளிப்படையான ஒரு சாட்சியாகத் திகழ வேண்டும். துறவற உடை அணிவதனால் காண்பிக்கும் சாட்சியத்தைவிட குருக்களுக்கு மிகவும் அவசியமானது வார்த்தையினால் கூறும் சாட்சியம். ஆனாலும், துறவற ஆடை அவர்களது குருத்துவத்தினை அடையாளமாக உணர்த்துவது ஆகும்.

திருச்சபைக்கும் (மதத்திற்கும்) ஆட்சியாளர்களுக்கும் - அரசிற்கும் உள்ள விரிசல் ஏற்றுக்கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளதால், கடவுள் மறுப்பு மனப்பான்மை சிறிது, சிறிதாக சமுதாயத்தில் வேரூன்று வதற்கு காரணமாகியுள்ளது. இன்று சமுதாயத்தில் கத்தோலிக்க மதத்தின் அவசியம் எந்த அளவிற்கு தேவை என்பது பற்றிய தெளிவான கருத்து அநேக கத்தோலிக்க விசுவாசிகளிடம், ஏன் குருக்களிடம்கூட இல்லையென்பதை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அந்த அளவிற்கு மதச்சார்பின்மை எங்கும் வியாபித்துள்ளது.

இத்தகைய சமுதாயத்தில் வாழும் குருவானவர் தன்னை சமுதாயத்திற்கு அந்நியராக தர்மசங்கடமாக உணரத் தொடங்கி பின்னர் மதத்தை பழைய கால அடையாளமாகக் கருதி மறைக்க விரும்புகிறார். இத்தகைய சமுதாயத்தில் தன்னை குருவென அடையாளம் காட்டிக்கொள்ள தயங்குகிறார். இதனால் மதச்சார்பற்ற உலகில் தனது அடையாளத்தை அதற்கேற்ப மாற்றி கலந்துவிட ஆசிக்கிறார். இத்தகைய குருக்களுக்கு அஞ்ஞான நாடுகளில் வாழும் மனப்பான்மையான அனுபவமே கிடைக்கிறது. அவர்களிடம் தங்களது குருத்துவத்தின் உந்நதத்தைப்பற்றிய எந்த சிந்தனையும் இல்லை.

இந்த சூழ்நிலையில் மதச்சார்பான மனநிலையைப் பற்றிய முடிவு செய்வது என்பது கடினமான ஒன்றாகும். நாம் அன்றாடம் சந்திக்கும் மக்களிடையே மதப்பற்றே இல்லை என்று நினைப்பது நியாயமல்ல.

இன்று நமது குருமடங்களிலிருந்து குருப்பட்டம் பெற்று வெளிவரும் இளைய தலைமுறையினரான குருக்களின் அநுபவம் வேறு விதமாக அல்லவா இருக்கிறது! அவர்களுக்கு தடையாகவா இருக்கிறது? இல்லை. உற்சாக மூட்டுவதாகவல்லவா இருக்கிறது! தெருக்களின் நிறுத்தங்களில் மக்கள் அவர்களைக் கண்டு பேசி மகிழ்வதில் ஆர்வம் காட்டுகிறார்களே! ஒரு குருவான வரை அப்படி பாரம்பரிய உடையில் காண்பது அவர்களுக்கு பெரும் மகிழ்ச்சியாகவல்லவா இருக்கிறது!! புதிய திருச்சபையின் முக்கிய அம்சம் பிறமத உரையாடல் என்கிறார்கள். ஆனால் நாம் நமது அடையாளத்தை மறைத்துக் கொண்டால் எப்படி உரையாடல் நடக்கும்? கம்யூனிச நாடுகளில் சர்வாதிகாரிகள் அதிகாரத்திற்கு வந்த பின் செய்யும் முதல் காரியம் குருத்துவ ஆடை அணிவதைத் தடைசெய்வதே; இது மதத்தை அழிப்பதற்கான அவர்களின் திட்டத்தின் ஒரு பகுதியாகும். இது சாத்தியம் என்றால் அதனை திருப்புவதும் சாத்தியம் என்பதை நாம் நம்பவேண்டும். குருவானவர் தமது வெளித் தோற்றத்தின் மூலம் தமது அடையாளத்தை அறிவிப்பது என்பதே ஒரு உயிருள்ள பிரசங்கம் போன்று சக்தி வாய்ந்ததாகும். பெரிய நகரங்களில் குருக்களின் அடையாளம் தொலைந்து போனதுதான் சுவிசேஷம் இன்னமும் போதிக்கப்படாமல் இருப்பதற்குப் பெரிய காரணமாகும். அது திருச்சபையை அழிக்கத் தேடுவோரின் வேலையாக உள்ளது.

அதோடு துறவற உடை அணிவது குருவானவருக்கு பெரும் உதவியாக இருக்கிறது. ஒவ்வொரு நொடியும் இவ்வுலகில் தங்களது அழைத்தல் - பணி என்ன என்பதை நினைவுப்படுத்தி அவரது மனநிலையை மாற்றுகிறது. சோதனைகளிலிருந்து அவரைப் பாதுகாக்கிறது. குருத்துவ உடையிலிருக்கும் குருவிற்கு தமது அந்தஸ்தில் குழப்பம் இல்லை. விசுவாசிகளைப் பொறுத்தவரையில் தாங்கள் யாருடன் பேசுகிறோம், பழகுகிறோம் என்பதை அறிவுறுத்துவதாக குருத்துவ உடை இருக்கிறது. குருத்துவ உடை குருத்துவத்திற்கான அதிகாரப்பூர்வமான உத்திரவாதமாக உள்ளது. சாதாரண உடையிலிருக்கும் குருவானவரிடம் பாவசங்கீர்த்தனம் செய்யப் போவது எவ்வளவு கடினமாக தாங்கள் உணர்வதை கத்தோலிக்கர்கள் என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். தங்களுடைய பாவங்களை அடையாளமில்லாத யாரோ ஒருவரிடம் சொல்லுவதைப் போன்ற மனநிலை ஏற்படுவதாகக் கூறி வருந்தியிருக்கிறார்கள். பாவசங்கீர்த்தனம் என்பது ஒரு நீதிமன்ற நடவடிக்கைப் போன்றது. ஆகையால் அங்கு நீதிபதிகள் தங்கள் நீதிபதிக்கான ஆடையை அணிந்து இருப்பது அவசியம்!

(தொடரும்)

# தேவ ஆராதனை முறைமை


## தேவ ஆராதனைக்குரிய பாத்திரங்கள்

இவைகள் மூவகைப்படும்: அபிஷேகம் பெற்றவை, ஆசீர்வதிக்கப்பட்டவை, அபிஷேகமும் ஆசீர்வாதமும் பெறாதவை.

### அபிஷேகம் பெற்றவை


CALIX

**(1) பூசைப்பாத்திரம் (CALIX) :** நமது ஆண்டவர் கடைசி இராப்போஜனத்தின் போது பின்பற்றிய முறையைத் திருச்சபை கையாண்டு வருகிறது. கிறீஸ்துவின் திரு இரத்தத்தை ஒப்புக்கொடுக்க வேண்டியதினால், இது தங்கம் அல்லது வெள்ளியினால் செய்யப்பட வேண்டும். வெள்ளியினால் செய்திருந்தால் உட்புறத்தில் தங்க முலாம் பூசியிருக்கவேண்டியது அவசியம்.


PATENA


**(2) பாத்திரத்தட்டு (PATENA) :** இது வட்டமான ஓர் தட்டு. இதிலே பூசையில் ஒப்புக் கொடுக்கப்படும் அப்பம் வைக்கப்பட்டிருக்கும். முற்காலத்தில் விசுவாசிகள் இது போன்ற ஒரு தட்டில் தான் பலிப் பொருட்களைச் சமர்ப்பித்தார்கள். பாத்திரத்தைப்போல் இது விலையுயர்ந்த உலோகத்தாலானது.

இவை இரண்டும் ஆண்டவரை அடக்கஞ் செய்திருந்த கல்லறைக்கு அடையாளம். மேற்றிராணியார் இவற்றைப் பரிசுத்த எண்ணெய்யால் அபிஷேகம் செய்திருத்தல் வேண்டும்.

### ஆசீர்வதிக்கப்பட்டவை


CIBORIUM

**(1) நற்கருணைப்பாத்திரம் (CIBORIUM) :** விசுவாசிகளுக்கு நற்கருணையை வழங்குவதற்காக சிறு கோதுமை அப்பத்துண்டுகளை வைப்பதற்கேற்ற பாத்திரம் **"சிபோரியம்"** எனப்படும். அரச பிரசன்னத்தைக் காட்டும் வெள்ளைப்பட்டுத் திரையால் மூடப்பட்டு சேசு உள்ளேயிருப்பதை அறிவிக்கும்.


OSTENSORIUM

**(2) கதிர் பாத்திரம் (OSTENSORIUM) :** பகிரங்கமாய் திவ்விய நற்கருணையை ஆராதிக்க நற்கருணைப் பேழையின் வெளியே ஸ்தாபகஞ் செய்யவும், சுற்றுப்பிரகாரமாய் எடுத்துப்போகவும் இது உதவுகிறது. சூரியக் கதிர்களைப் போல் சித்தரிக்கப்பட்டிருப்பதால் இதற்கு இப்பெயர் உண்டாயிற்று. இதன் நடுவே நற்கருணையைத் தாங்கும் சிறிய வட்டமான தங்கப்பூணுக்கு "லூனுலா" (Lunula) என்று பெயர்.

### அபிஷேகமும் ஆசீர்வாதமும் பெறாதவை

இரசக்குப்பிகள், தூபக்கலசம், தீர்த்த பாத்திரம் அல்லது சொம்பு, கைமணி, நன்மைத்தட்டு முதலியன.

## தேவ ஆராதனைக்குரிய துணி வகைகள்


இவை யாவும் "லினென்" என்ற ஒருவித சணல் லூலால் செய்யப்பட்ட உயர்ந்த துணியாலானவை; பருத்தி நூல் கூடாது. ஏனெனில் ஆண்டவருடைய திருச்சரீரத்தை அடக்கஞ் செய்வதற்கு அரிமத்தையா சூசையும், புண்ணிய ஸ்திரீகளும் செய்ததுபோல நமது பீடத்தில் பலியாகும் செம்மறிப்புருவையான கிறீஸ்துவின் திருச்சரீரத்தைத் தாங்குவதற்கு உயர்ந்த துணிகளை உபயோகிப்பது நியாயமே. இந்தத் தூய துணிகள் நமது ஆத்துமம் இருக்கவேண்டிய சுத்தத்தையுங் குறிக்கின்றன.

இவைகளில் சில ஆசீர்வதிக்கப்பெற்றவை. மற்றவை, ஆசீர்பெறாதவை.

### ஆசீர் பெற்றவை


**(1) பீடத் துணிகள் :** இரு துணிகள் ஒன்றின்மேல் ஒன்றாகப் பீடத்தின் மேற்பரப்பை முழுவதும் மூடியிருக்கும். இவைகளின்மேல் மூன்றாவது துணியொன்று இரு பக்கங்களிலும் தரையைத் தொடும்படி தொங்க வேண்டும்.

**(2) கோர்ப்பொராலே (CORPORALE) :** திருமேனித் துகில்; பீடத்தின்மேல் அப்பம், பூசைப்பாத்திரம், நற்கருணைப்பாத்திரம் இவைகளை வைப்பதற்குச் சதுர வடிவான ஓர் சிறு துணி. இதில் ஆண்டவருடைய திருச்சரீரம்கிடத்தப்படுவதால் "சரீரத்துணி" என்ற அர்த்தமுள்ள "கோர்பொராலே" என்னும் பெயர் உண்டாயிற்று; பலி நிறைவேற்றுவது இச் சிறிய துணியின் மேல்தான்.



CORPORALE


**(3) பல்லா (PALLA) :** பூசைப் பாத்திரத்தையும் அதன் மேலுள்ள தட்டையும் மூடக்கூடிய அளவுள்ள சதுரமான சிறு துணி; வளையாமலிருக்க அட்டையோடு பொருந்தியிருக்கும்.



PALLA

## ஆசீர் பெறாதவை


**(1) சுத்திகரிக்கும் துணி (PURIFICATORIUM) :** மூன்றாக மடிக்கப்பட்டுப் பூசைப் பாத்திரத்தின்மீது வைக்கப்பட்டிருக்கும் துணி. பாத்திரத்தையும், குரு திரு இரத்தம் உட்கொண்டபின் தம் உதடுகளையும் விரல்களையும் துடைப்பதற்கு உதவுவது.



PURIFICATORIUM


**(2) கைத்துண்டு (MANUTERGIUM) :** குரு பூசையில் தம் விரல்களைக் கழுவியபின் துடைப்பதற்கு உபயோகிக்கப்படுகிறது.

**(3) பாத்திரம் மூடும் பட்டு (VELUM) :** இது பாத்திரத்தையும் அதன் தட்டையும் மூடிவைக்க உபயோகப்படும் சதுரமான பட்டுத்துணி. இது அந்தந்த நாள் பூசை உடுப்புகளின் நிறத்திற்கு ஒத்ததாயிருக்கும்.



VELUM

**(4) பை (BURSA) :** இதனுள் கோர்ப்போரலை மடித்து வைக்கிறார்கள். சதுர வடிவானது. ஒரு ஓரம் மட்டும் திறந்திருக்கும். இதனுடைய நிறமும் பூசை உடுப்புகளைப்போலவே இருக்கும்.



BURSA

(2-ம் பக்கத் தொடர்ச்சி. . .)

**தற்கொலை!**

வாசகர்களுக்கு கவலைத் தரும் செய்தி ஒன்றை தெரியப்படுத்த விரும்புகிறோம். உங்களில் சிலர் பாரம்பரிய ஒழுங்குகளை அநுசரித்து வந்த திவ்விய இரட்சகர் சபைத் துறவிகளை அறிந்திருப்பீர்கள். இதுவரை அர்ச். 10-ம் பத்திநாதர் குருக்கள் சபையுடன் கருத்தில் உடன்பட்டு செயல்பட்டவர்கள், இப்போது நவீன சங்க சபையில் சேர்ந்து தங்களுக்குத் தாங்களே குழி தோண்டிக் கொண்டனர். அவர்கள் தற்போதும் பாரம்பரிய போதனைகளைத்தான் பின்பற்றி வருகிறோம் என்று சொன்னாலும் அவர்கள் நவீன மனப்பான்மையை ஏற்றுக்கொண்டு விட்டார்கள். கடைசியாக அவர்கள் வெளியிட்ட 'Catholic' என்ற பத்திரிக்கையில் அர்ச். 10-ம் பத்திநாதர் சபையின் சங். பிரான்சிஸ் சுவாமி, 'Inculturasation - கலாச்சார கலப்பு' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் இந்த கலாச்சார கலப்பு பற்றிய பாப்பரசர் 16-ம் ஆசீர்வாதப்பர் கொண்டிருக்கும் கருத்தை விமர்சித்திருந்தார். இந்த பகுதியை மட்டும் நீக்கி மற்றவைகளை வெளியிட்டுள்ளார்கள்! அவர்கள் இனிமேலும் வத்திக்கானில், ஏன்? மற்ற மேற்றிராசனங்களில் விசுவாச நல்லொழுக்கத்திற்கு எதிராக நடக்கும் தவறுகளை விமர்சிக்க விரும்பவில்லை. நவீன உரோமை கேட்பதும் இதனைத்தான்! 2-ம் வத். சங்கத்தையும், அதன் கொள்கைகளையும் விமர்சிக்கக் கூடாது என்பது நவீன வத்திக்கான் அதிகாரிகளின் நிபந்தனை!!

வாசகர்களுக்கு ஒரு சுபசெய்தியையும் தர விரும்புகிறோம்! பாளையங்கோட்டையை மையமாகக்கொண்டு தனது அப்போஸ்தலிக்க பணியை இந்தியா முழுவதும் செய்து வந்த எமது குருக்கள் சபை, தனது 2வது குருக்கள் இல்லத்தை வசை (Vasai) என்ற மேற்றிராசனத்தில் வருகிற ஆகஸ்ட் 15-ம் தேதி மாதாவின் மோட்சாரோபண திருநாளன்று துவங்க இருக்கிறது. சங். பிரான்சிஸ் சுவாமி, மற்றும் சங். ஜோசப் சுவாமியும் அங்கு பணியாற்ற செல்வார்கள். இப்புதிய குருக்கள் இல்லம் மும்பையில் இரண்டு பூசைத் தளங்களையும், கோவா, சென்னை மற்றும் அதனருகிலுள்ள ஆர்.என். கண்டிகை ஆகிய பூசைத் தளங்களையும் கவனித்து வரும். இந்த அப்போஸ்தலிக்க அலுவல் மிகுந்த பலன் தந்து இந்தியா முழுவதும் பாரம்பரிய கத்தோலிக்க விசுவாச ஒளியை பரப்பும் படியாக வேண்டிக்கொள்ளுங்கள்!

**PAX VOBIS**

**சங். வளன் D.ராஜகுமார் சுவாமி**

**அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபை**

**பாளையங்கோட்டை**

# ‘Sanguis Martyrum Semen Christianorum’

## (வேதசாட்சிகளின் இரத்தம் கிறீஸ்துவர்களை விளைவிக்கும் வித்து!)

# கத்தோலிக்க விசுவாசத்திற்காக உயிர்நீத்தவர்களின் வரலாறு

(இங்கிலாந்து நாட்டில் ஆங்கிலிக்கன் புராட்டஸ்டாண்ட் பிரிவினையின் போது தங்களது சத்திய கத். விசுவாசத்தில் உறுதியாக இருந்து பதிதத்தை மறுத்து தங்களுடைய இன்னுயிரை நீத்தவர்களின் வரலாறு இங்கே வெளியிடப்படுகிறது.)

## (3) அர்ச். ஜாண் ஃபிஷர் (1469 - 1535) (தொடர்ச்சி)

### சிறை பிடிக்கப்பட்ட மேற்றிராணியார்!

அரசனின் விவாகரத்து முயற்சியை எதிர்த்த ஃபிஷர் மன்னனின் விரோதத்திற்கு ஆளானார். ஒருமுறை அவரது இல்லத்திற்கு வழங்கப்பட்ட உணவில் விஷம் கலக்கப்பட்டது. அதில் அவரது இல்ல ஊழியர்கள் அநியாயமாகக் கொல்லபட்டனர். ஆனாலும் சர்வேசுரனின் போதனைக்கு விரோதமான அரசனின் செய்கைகளை அஞ்சாநெஞ்சத்துடன் எதிர்த்து பிரசங்கம் செய்தார். இதனால் அரசனின் சினம் அதிகமாகியது.



இதற்கிடையில் அரசனின் சான்சலராக இருந்த அர்ச். தாமஸ் மோர் தமது எதிர்ப்பைத் தெரிவிக்க, தமது பதவியை இராஜினாமா செய்தார். 1533 ஜனவரியில் அரசன் ஹென்றி தான் விரும்பியபடியே தன் மனங்கவர்ந்த ஆன்போலினை இரகசியமாக மணம் செய்து கொண்டான். அதே ஆண்டு ஜுன் முதல் நாளன்று ஆன்போலினை பட்டத்து அரசியாக முடிசூட்டப்பட இருப்பதால் அதனை எதிர்க்கும் மேற்றிராணியார் ஃபிஷர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

ஃபிஷர் மேற்றிராணியார் உடல்நலம் குன்றிப்போனதால் அவர் மீதான விசாரணை தள்ளிவைக்கப்பட்டது. ஆனால் அதே சமயம் 300 பவுண்டு பணம் அபராதமாய் கட்டினால் மன்னிப்பு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட சலுகையை ஆயர் மறுத்து விட்டார். அச்சமயத்தில் பாராளுமன்றம் கூட்டப்பட்டு ஹென்றி, ஆன்போலினின் வாரிசுகளுக்கு அரச மகுடம் வழங்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதனை ஏற்க மறுத்தவர்கள் தேசத்துரோகி என்ற குற்றத்திற்கு ஆளாக்கப்பட்டனர். அதில் கிறீஸ்தவ நெறிகளும், தேவ கட்டளையும், பாப்பரசரின் முழு அதிகாரமும் புறக்கணிக்கப்படுவதை உணர்ந்த ஃபிஷர் ஆண்டகை தாம் தேசத்துரோகி என்ற குற்றம் சாட்டப்பட்டு மரணத் தீர்வு பெறுவோம் என்பதை உணர்ந்தும் அஞ்சாநெஞ்சத்துடன் அச்சட்டத்தை ஏற்றுக்கொள்ள மறுத்து அதனை கண்டனம் செய்தார். அதனால் 1534, ஏப்ரல் 26-ல் லண்டன் டவர் சிறையில் அடைக்கப்பட்டார். நவம்பரில் மீண்டும் 2-வது தடவையாக விசாரிக்கப்பட்டு மரணத் தீர்ப்பு பெற்றார். அதோடு அவரின் மேற்றிராணியார் அந்தஸ்து பரிக்கப்பட்டு, அவரது ராச்செஸ்டர் மேற்றிராசனம் காலியானது என்று அறிவிக்கப்பட்டது.

### கர்தினாலாக உயர்வு!

இந்த சமயத்தில், (1535, மே-யில்) புதிய பாப்பரசராக 3-ம் சின்னப்பர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இங்கிலாந்தில் நடந்துவரும் பிரிவினை முயற்சிகளையும், அதனை வீரத்தோடு எதிர்த்து சிறை தண்டனை அனுபவித்து வரும் மேற்றிராணியார் ஃபிஷரை மரியாதை செய்யவும், அவரது உயிரைக் காக்கும் முயற்சியாகவும் அவரை கர்தினாலாக உயர்த்தினார். கர்தினாலாக உயர்த்தப்பட்டதால் அரசன் சற்றேனும் மதித்து விடுவிப்பான் என்று எதிர்பார்த்த பாப்பரசருக்கு தோல்வியே கிடைத்தது. ஆம்! பாப்புவின் செயல் அரசன் ஹென்றியை கோபாவேசம் கொள்ளச் செய்தது. ஆயரின் விசாரனையைத் துரிதப்படுத்தி மரணத் தண்டனையை உறுதி செய்தான்.

ஏற்கனவே நோயுற்றிருந்த கர்தினால் ஃபிஷரை சிறை வாழ்க்கை வெகுவாகவே பாதித்திருந்தது. உடல் மெலிந்து, எலும்புக்கூடாக காட்சியளித்த அவரை அலைக்கழித்து இறுதியில் ஜுன் மாதம் 17-ம் நாளன்று வெஸ்ட்மினிஸ்டர் ஹாலில் நடைபெற்ற இறுதி விசாரனையின் முடிவில் "தேசத்துரோகி" என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. தமது அனைத்து விசாரனைகளிலும் திருச்சபை போதனைகளையும், தேவ கட்டளைகளையும் எடுத்துக் கூறி அரசனது அனைத்து செயல்களையும் உறுதியோடு கண்டனம் செய்தார் ஃபிஷர் ஆண்டகை.

**வேதசாட்சியம்!**

*ஜுன் 22-ம் நாள் மரணத் தண்டனை நிறைவேற்றக் குறிக்கப்பட்டது. அன்று அதிகாலை 5 மணிக்கு கர்தினால் ஃபிஷரின் அறைக்கு வந்த சிறை அதிகாரி அங்கே அவர் அயர்ந்து தூங்குவதைக் கண்டு வியந்து போனார். ஒரு மரணத் தண்டனை கைதியால் எப்படித் தூங்க முடிகிறது?! மரியாதைக் கலந்த வியப்போடு அவரை மெல்ல தட்டி எழுப்பினான். உடனே விழித்து எழுந்தவர், அவருக்கு நன்றி கூறி தண்டனை நிறைவேற வேண்டிய நேரத்தைக் கேட்டார். 'காலை 10 மணிக்கு' என்ற பதிலால் திருப்தியடைந்த ஃபிஷர் ஆண்டகை, "நல்லது, என்னை இன்னும் 2 மணி நேரமாவது தூங்க அனுமதிப்பீர்களா? இரவு சரியாகத் தூங்கவில்லை. மரண பயத்தினால் அல்ல. எனது நோயினாலும், பலவீனத்தாலும்தான் தூங்க முடியவில்லை" என்று கூறியவர் மெல்ல மீண்டும் படுத்துக்கொண்டார். சற்றைக்கெல்லாம் அயர்ந்து தூங்விட்டவரைக் கண்டு வியப்பில் ஆழ்ந்தான் சிறையதிகாரி!*

*அவர் தூங்கி எழுந்ததும், அவர் எப்போதும் அணிந்திருக்கும் தவச்சட்டையான மயிராடை அகற்றப்பட்டது. சுத்தமான நேர்த்தியான ஆடையை வாங்கி அணிந்து கொண்டவர், "ஆம் இன்று எமது திருமண நாளன்றோ! புதிய சுத்தமான உடைதானே அணிய வேண்டும்?" என்று கூறி தயாரானார்.*

*டவர் சிறையை விட்டு வெளியே வந்த அவரை இரு காவலர்கள் ஒரு ஆசனத்தில் அமர்த்தி வாசல்வரைக்கும் தூக்கி வந்தனர். அங்கே இறுதி தீர்ப்பு வாசித்தலுக்காக காத்திருந்தவர், களைப்பால் சுவரில் சாய்ந்தவண்ணம் தன்னோடு எடுத்து வந்திருந்த சுவிசேஷப் புத்தகத்தை எடுத்து மன்றாடியவாறு திறந்து, கண்ணில் பட்ட பக்கத்தின் வாசகத்தை வாசித்தார். அருளப்பர் சுவிசேஷம் 17-ம் அதிகாரம் 3 முதல் 4 வசனங்களைப் படித்தவர் கண்ணீர் பொங்க மகிழ்வோடு வாசித்து ஜெபித்தார்.*

*நடக்க இயலாத காரணத்தினால் மீண்டும் காவலர்களால் தூக்கிலிடப்படும் மேடைக்கருகே கொண்டு செல்லப்பட்டார். அதற்குள் தண்டனை நிறைவேற்றத்தை காண மக்கள் கூட்டம் அங்கே கடலென கூடிவிட, கர்தினால் ஃபிஷர் மெதுவாக மேடையின் படிகளில் ஏறலானார். மேடையில் ஏறி நின்ற அவரது முகம் பகல் பொழுதின் சூரிய ஒளியால் பிரகாசித்தது. அவரது வாய் 33-ம் சங்கீதத்தை பக்தியோடு உச்சரித்துக் கொண்டிருந்தது.*

*முகமூடியணிந்த கொலைஞர்கள் இருவர் வழக்கப்படியே, அவரிடம் மன்னிப்புக் கேட்டனர். அவர்களை ஆசீர்வதித்தவரின் உடை களையப்பட்டு கன்னியமான உள்ளாடையோடு மக்கள் முன்னிலையில் சற்று கூச்சத்தோடு நின்றார். கல்வாரியில் நமதாண்டவர் அடைந்த மானபங்க நிலையை தியானித்தார். தம்மை நோக்கி "ஐயோ!" என்று அனுதாபக் குரல் எழுப்பும் கூட்டத்தினரை அன்போடு ஆசீர்வதித்து, "கிறீஸ்தவ மக்களே! கிறீஸ்துநாதரின் கத்தோலிக்கத் திருச்சபையின் விசுவாசத்திற்காக மரிக்கிறேன். அந்த மேலான மகிமைக்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். நான் சாவுக்கு அஞ்சவில்லை. உங்களது உதவியைக் கேட்கிறேன். எனக்காக ஜெபியுங்கள். எனது தலை வெட்டப்படும் அந்த சமயத்திலும்கூட எனது கத்தோலிக்க விசுவாசத்தினை பயத்தால் மறுதலித்துவிடாதிருக்க மன்றாடுங்கள். அரசருக்காகவும், இந்த தேசத்திற்காகவும் ஜெபிக்கிறேன். அரசருக்கு நல்ல ஆலோசகரை அனுப்பும்படி சர்வேசுரனை மன்றாடுகிறேன்" என்று உரத்தக் குரலில் கூறினார். உயிர் பிழைக்கத் தமக்கு வழங்கப்பட்ட கடைசி வாய்ப்பையும் உதறிவிட்டு "தேதேயும் - நன்றிக்கீதம்" பாடினார். ஜெபித்து முடிந்ததும் காத்திருந்த கொலைஞர்களுக்கு சைகை காட்ட அவரது கண்கள் கட்டப்பட்டன. பின்னர் தமது மெலிந்த கழுத்தை அங்கேயிருந்த கொலைப் பீடத்தில் மெல்ல வைக்க, வாய் "சேசு மரியாயே" என்ற நாமத்தை உச்சரித்தது. உடனே மேலே உயர்த்தியிருந்த கொலைஞரின் வாள் கீழே இறங்கி தலையைத் துண்டித்தது. தலையற்ற கர்தினால் ஃபிஷரின் உடலிலிருந்து இரத்தம் வெள்ளமென பாய்ந்தோடி தரையை நனைத்தது. அவரது உடல் அடக்கம் செய்யப்பட, தலையோ தேம்ஸ் நதி பாலத்தின் கம்பத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டது!*


**அர்ச். ஜாண் ஃபிஷரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்!**

## தொழு நோயாளிகளின் அப்போஸ்தலர் !

பெல்ஜிய நாட்டைச் சேர்ந்த சங். தமியன் மொலாக்காய் சுவாமி 1840, ஜனவரி 3–ம் நாள் பிறந்தார். சேசு மரிய இருதயங்களின் சபையில் உட்பட்ட குருவானவர், ஹவாய் தீவின் மேற்றிராணியாரின் வேண்டுகோளுக்கிணங்க அத்தீவுகளில் கைவிடப்பட்டிருந்த தொழு நோயாளிகளின் மத்தியில் உழைக்க அனுப்பப்பட்டார். அங்கு வசித்த தொழு நோயாளிகளின் ஆன்ம சரீர நலத்திற்காக அயராது பாடுபட்டு உழைத்த இவர் எந்த அளவிற்கு நோயாளிகளோடு பழகினாரென்றால், இறுதியில் அந்த கொடிய நோய் இவரைத் தாக்கவே, 1889, ஏப்ரல் 15–ம் நாள் மரண மடைந்தார். இவரது அப்போஸ்தலிக்க ஆன்ம தாகத்தையும் பிறர் சிநேக ஆர்வத்தையும் கண்டுகொண்ட திருச்சபை அவருக்கு முத்திபேறு பட்டம் வழங்கியதோடுமல்லாமல், விரைவில் அவருக்கு அர்ச்சியசிஷ்ட பட்டமும் வழங்கவிருக்கிறது.

# திரிதெந்தீன் திவ்விய பலிபூசையை

## அறிந்து கொள்வோம்!



[கத்தோலிக்கத் திருச்சபையின் பொக்கிஷமான திரிதெந்தீன் திவ்விய பலிபூசை ஒருபோதும் தடைசெய்யப்படவில்லை. அது திருச்சபையில் நித்தியமாக நிறுவப்பட்டுள்ள மெய்யான கல்வாரி பலியாகும். இப்பூசையில் சிறந்த முறையில் பங்கேற்பது நமது விசுவாச வாழ்வுக்கு உறுதுணையாக இருக்கும். அதற்கு பூசையின் ஒவ்வொரு பகுதியையும், அதன் முக்கியத்துவத்தையும் விசுவாசிகள் அறிந்து கொள்வது அவசியம். அதற்கு இத்தொடர் உதவும். – ஆசிரியர்]

### முதல் பாகம்

**இரண்டாம் பிரிவு (உபதேசப் பாகம்)**

**5. சபைச் செபம் –(Collecta) தொடர்ச்சி**



சபை செபம் அதன் அழகிற்கும், உயர்விற்கும் பெயர் பெற்றது. குருவானவரும், விசுவாசிகளும் ஒரே மனதாய் ஏகோபித்து செபிப்பதாலும், நமது மன்றாட்டுகளெல்லாம் இந்த ஒரேயொரு செபத்திலேயே அடங்கியிருப்பதாலும் "சபைச் செபம்" என்றழைக்கப் படுகிறது. குரு இச்செபத்தை செபிக்கும்போதெல்லாம் கரங்களை விரித்துக்கொண்டு செய்வது வேதாகம வழக்கம். தேவ சமூகத்தில் சங்கையும், ஊக்கமும் இருக்கவேண்டும் என்பதை இந்த செயல் காட்டுகிறது.

சபைச் செபம் மன்றாட்டின் செபமாக இருக்கிறது. இது வெவ்வேறு நாட்களிலும், திருநாட்கள் மற்றும் சிறப்பு நோக்கத்திற்காக பூசை நிறைவேற்றப்படுவதின் விசேஷ தன்மையைப் பொறுத்து மாறுபடும். திருச்சபை கிறீஸ்துவி னுடைய மீட்பின் இரகசியத்தையும், அவரது பரிசுத்த மாதாவினுடைய மகிமையையும் அர்ச்சியசிஷ்டவர்களுடைய நினைவு நாட்களையும் கொண்டாடுகிறது. ஏனெனில் அவை குருவிற்கும், விசுவாசிகளுக்கும் படிப்பினையாகவும், சுபாவத்துக்கு மேலான வரப்பிரசாத வாழ்விற்கான ஊற்றாகவும் (source) இருக்கின்றன. திருச்சபையின் திருவழிபாட்டு ஆண்டு முழுவதிலும் இவை தக்க போதனையாலும், வரப்பிரசாதம் பாயும் வாய்க்காலாகவும் இருந்து நம்மைத் தூண்டி நமது குறுகிய கால இவ்வுலக வாழ்வை நன்கு பயன்படுத்தி, முடிவில்லாத பேரின்ப வாழ்வுக்கு நாம் புகுவதற்கான மன்றாட்டாகவும் இருக்கின்றன. இப்படியாக சபைச் செபமும், பூசையின் மற்ற பாகங்களும் நமது நன்மைக்காகவும் நம்மை திருச்சபையின் ஆண்டினைக் கொண்டாட தகுதியாக்குவதாகவும் உள்ளன. அதற்கேற்ப உள்ளரங்க வாழ்வை மாற்றி, நமது நடத்தையில் ஞான நலன்கள் வெளிப்படும்படியாக பூசைகள் அமைந்துள்ளன.

### சபைச் செபத்தின் வடிவங்கள்

சபைச் செபம் ஒவ்வொரு நாளுக்கான தனிப் பட்ட வரப்பிரசாதத்தைப் பெறுவதற்கான மன்றாட்டாக இருக்கிறது. ஆனால், இந்த மன்றாட்டு எந்த வடிவத்தில் உள்ளது? சபைச் செபங்கள் வித்தியாசமான வேறு பட்டதாக இருந்தாலும் அவற்றின் வடிவமைப்பில் ஒரு ஒருமைத்தன்மையைக் கொண்டுள்ளன. மன்றாட்டு சர்வேசுரனுக்கு வெறுமனே ஒப்புக்கொடுப்பதாக இல்லாமல் அதிக பலன்களைத் தரும் வகையில் மற்ற ஜெபங்களின் அனுசரனையோடு சேர்ந்து சொல்வதாக இருக்கிறது. வாழ்த்து, ஆராதனை, நன்றியறிதல் இவை அனைத்து ஜெபங்களும் மன்றாட்டில் இணைகின்றன. இந்த மன்றாட்டு நமது தற்போதைய இவ்வுலக வாழ்வுக்கு மிகவும் முக்கியமான ஜெபமாக உள்ளது. இந்த மன்றாட்டுக்களே சபைச் செபத்தின் சாரத்தை மாற்று வனவாகத் திகழ்கின்றன. அர்ச். சின்னப்பர் "...சகல மனுஷர்களுக்காக விண்ணப்பங்களும், ஜெபங்களும், மன்றாட்டுகளும், நன்றியறிந்த ஸ்தோத்திரங்களும் பண்ணப்பட வேண்டும்" (1 திமோ. 2:1) என்று கூறுகிறார். இந்த நான்கு வகையான ஜெப அம்சங்களும் திவ்விய பலிபூசை நிறைவேற்றுதலில் காணப்படுவது மட்டுமல்லாமல், முக்கியமாக சிறப்பான வகையில்

ஒவ்வொரு சபைச் செபத்திலும் இணைக்கப்பட்டுள்ளன. ஆகவே தான் இது மிகவும் வல்லமையுள்ள மன்றாட்டின் செபமாகத் திகழ்கின்றது.

ஜெபிக்கிறவர் சர்வேசுரனிடம் வரவேண்டும். அவரது சந்நிதிக்குச் செல்லவேண்டும். தன்னையே தாழ்த்தி சர்வேசுரனை நோக்கி உயர்த்தவேண்டும் (oratio). பின்பு அவனுடைய மன்றாட்டுகளை - விண்ணப்பங்களை (Postulatio) அவரிடம் சமர்ப்பிக்க வேண்டும்; பின்னர் தமது மன்றாட்டைப் பெற்றுக்கொண்டதான நன்றியறிதலோடு சேர்க்கவேண்டும் (Gratiarum actio). நாம் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்கு நன்றியுடையவர்களாயிருக்க வேண்டும். மேலும் நாம் அபரிமிதமாகப் பெற்றுக்கொள்வதற்கு நமது மன்றாட்டுகள் தப்பாமல் கேட்கப்பட மிகவும் வல்லமையுள்ள வழி எதுவென்றால், அவை நமதாண்டவர் சேசுக்கிறீஸ்துவின் பேறுபலன்கள், அவரது பரிந்துரைகளின் மூலமாக சர்வேசுரனை இறைஞ்சுவதே. ஆகையால்தான், சபைச் செபம் "... எங்கள் ஆண்டவர் சேசுக்கிறீஸ்துவின் வழியாக..." என்று முடிக்கப்படுகிறது.

உதாரணமாக: **இஸ்பிரீத்துசாந்துவின் திருநாள் செபம்.** "சர்வேசுரா, விசுவாசிகளுடைய இருதயங்களை இஸ்பிரீத்துசாந்துவின் பிரகாசத்தால் இத்தினத்தில் படிப்பித்தருளினீரே; இந்த இஸ்பிரீத்துசாந்துவினால் நாங்கள் சரியானவைகளை உணரவும், அவருடைய ஆறுதலால் எப்பொழுதும் மகிழ்ந்திருக்கவும் எங்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருளும். (மன்றாட்டு) **இவைகளையெல்லாம் எங்கள் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்து வழியாக தந்தருளும்**" ஆமென். (Supplication) - பரிந்துரை மன்றாட்டு).

ஆகையால் தான் திருச்சபை சபைச் செபத்தின் மூலமாக "...எல்லா ஜெபத்திலும், வேண்டுதலிலும் நன்றியறிந்த தோத்திரத்தோடுகூடிய உங்கள் மன்றாட்டுகள் தேவ சமூகத்தில் தெரியவரக்கடவது" (பிலிப். 4:6) என்ற அப்போஸ்தலர்களின் ஆலோசனையை ஏற்றுக்கொள்கிறது.

ஜெபங்கள் மகா பரிசுத்த பிரிவில்லாத தமத்திரித்துவத்திற்கோ அல்லது தெய்வ ஆட்களில் ஒருவருக்குச் சொல்லப்படலாம். ஒரேயொருவருக்கு சொல்லப்படும்போது, மற்ற இரு தேவ ஆட்களும் ஒருங்கே அங்கே சேர்க்கப்படுகிறார்கள். அவர்களும் அதில் இணைந்துள்ளார்கள் என்பதை நினைவுகூற வேண்டும். சபைச் செபத்திலும் சொல்லப்படும் செபம் இப்படியாகவே தான் அமைந்துள்ளன. அவை நேரடியக பிதாவுக்கோ அல்லது சுதனுக்கோ சொல்லப்பட்டாலும் அதன் முடிவில் வெளிப்படையாக மகா பரிசுத்தத்தை ஏற்று அறிக்கையிடும்படியாகவே அமைந்துள்ளன.

திருச்சபையும், வழக்கமாக பிதாவிடம் ஜெபிக்கும்போது, கிறீஸ்துவினுடைய முன்மாதிரிகையை - போதனைகளைப் பின்பற்றுகிறது. "...என் நாமத்தினாலே நீங்கள் பிதாவினிடத்தில் ஏதாகிலும் கேட்பீர்களேயாகில் அதை அவர் உங்களுக்குத் தந்தருளுவார் என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன் (அரு. 16:23). இதனாலேயேதான் சபைச் செபத்தின் அதிகமான பகுதி பிதாவுக்குச் சொல்லப்படுகின்றன. அதோடு நமது மன்றாட்டின் செபமும் "சேசுவின் நாமத்தால்" சொல்லப்பட வேண்டும். சேசுவே நமது மத்தியஸ்தர். அவர் வழியாகவே நமது அனைத்துச் செபங்களும், மன்றாட்டுகளும் பரலோகத்தை நோக்கி எழும்புகின்றன. அவர் வழியாகவே எல்லா வரப்பிரசாதங்களும், தேவ ஆசீர்வாதங்களும் மோட்சத்திலிருந்து இறங்கி வருகின்றன. எனவேதான் நாம் சபைச் செபத்தை "...எங்கள் ஆண்டவர் சேசுக்கிறீஸ்துவின் வழியாக" என்று சொல்லி முடிக்கிறோம். இந்த ஒழுங்கு பூசையின்போது விசேஷமான முறையில் அநுசரிக்கப்படுகிறது. ஏனெனில் சேசுநாதர்தாமே தன்னைத் தானே பரலோக பிதாவுக்கு ஒப்புக்கொடுக்கிறார். பலியும் அவரே - பலிபொருளும் அவரே - பலி ஒப்புக்கொடுப்பவரும் அவரே!

சில சபைச் செபங்கள் பரி. தமதிரித்துவத்தின் இரண்டாம் ஆளாகிய சுதனுக்குச் சொல்லப்படுவதாக இருக்கின்றன. ஏனெனில் அவை அவரது மனிதாவதாரத்தின் இரகசியத்தைப் பற்றியதாக இருக்கின்றன. (உ.ம்.) தேவநற்கருணை திருநாள், திருச்சிலுவை கண்டெடுக்கப்பட்ட திருநாள் போன்றவை. ஆனால் எந்த ஒரு சபைச் செபமும் இஸ்பிரீத்துசாந்துவானவருக்குச் சொல்லப்படுவதாக இல்லை. வழிபாட்டில் ஜெபங்களும், கீதங்களும் அவருடைய மகிமையை சாற்றுவதாக இருந்தாலும் சபைச் செபமாக இல்லை.

(தொடரும்)

## தேவ நிந்தைக்குத் தண்டனை!


**சைப்பிரஸ் (Cyprus) என்னுந் தீவிலுள்ள ஒரு தேவாலயத்தில் பல துலுக்கர் உத்தரவின்றிப் பிரவேசித்து, அவமரியாதையாய்ப் பேசிக்கொண்டிருக்கையில், அவர்களில் ஒருவன் பீடத்திலுள்ள சுரூபத்தைக் காட்டி, "இச்சுரூபத்தால் என்ன பிரயோசனம்?" என்றான். அப்போது அருகாமையில் நின்றுகொண்டிருந்த கிறீஸ்தவன், "அந்த திருச்சுரூபத்தை வணங்குகிறவர் மேல் தேவ ஆசீர்வாதமும், அதை அவசங்கைப்படுத்துகிறவர்கள் மேல் தண்டனையும் வருவதே அதன் பிரயோசனம்" என்றான். அதற்க அந்த துஷ்டன் தன் கையிலிருந்த ஈட்டியை நீட்டி, சுரூபத்தின் கண்ணைக் குத்தி, "இச்சுரூபத்தின் கண்ணைக் குத்துவதால் எனக்கு என்ன தண்டனை உண்டாகும் பார்க்கலாம்" என்ற கணமே என்ன அதிசயம்! அந்த துலுக்கனுடைய கண் விழி கண் குழியினின்று கீழே விழுந்தது.**

# தேவ அன்னைக்கு ஓர் புகழ்மாலை!

**(தேவமாதாவின் புகழ்பாடும் மாதா பிரார்த்தனையின் விளக்கம் இங்கே விவரிக்கப்படுகிறது)**

## (11) நல்லாலோசனை மாதாவே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

*1467-ம் ஆண்டு ஏப்ரல் 25-ம் நாளன்று ரோமைக்கருகேயுள்ள ஜென்னஸானோ நகர் தேவாலயத்தில் ஓர் அற்புதம் நிகழ்ந்தது. மாலை ஆராதனையின்போது, திடீரென பரலோக இன்னிசை கேட்க, பிரகாசமான மேகம் ஒன்று அங்குள்ள அர்ச். பிளாசியார் பீடத்தில் வந்து தங்க, ஆலயமணிகள் தானாகவே ஒலிக்கத் துவங்கியது! சற்றைக்கெல்லாம்,*



மேகம் மறைய பீட சுவரில் நல்லாலோசனை மாதாவின் படம் பொருத்தப்பட்டிருந்ததைக் கண்டு, அங்கேயிருந்த மக்கள் அதிசயித்துப் போனார்கள். அல்பானியாவில் ஸ்குட்டாரி (Scutari) என்ற ஊர் தேவாலயச் சுவரில் வரையப்பட்டு வணங்கப்பட்ட அந்தப் படம், துருக்கியர் அந்நகரைக் கைப்பற்றியதால் அவசங்கை அழிவிலிருந்து பாதுகாக்கப்பட தேவ பராமரிப்பால் அற்புதமாய் ஜென்னஸானோ நகர் தேவாலயத்திற்கு கொண்டுவரப் பட்டதை அறிந்து வியந்து போனார்கள். அந்தச் சுவர் சித்திரம் இன்றும் அங்கே வணங்கப்பட்டு வருகிறது. 13-ம் சிங்கராயர் பாப்பரசர் 1903-ல் ஏப்ரல் 26-ம் நாளில் நல்லாலோசனை மாதா திருநாளை ஏற்படுத்தினார்!

ஆம்! தேவதாய் பரி. கன்னிமாமரி நல்லா லோசனை மாதாவாக இருக்கிறார்கள். நாம் இவ்வுலகில் ஜீவிக்கும் வரையில் நமக்கு சிக்கல்களும், தீராத பிரச்சினைகளும் ஏற்படுவது சகஜம். எந்த முடிவை எடுப்பது என்பதில் திகைத்துப் போகிறோம். அப்போது நமக்கு நல்ல ஆலோசனை கூறி நம்மை வழிநடத்த ஒருவரைத் தேடுகிறோம். அவர் கூறிய வழிகளை பின் பற்றுகிறோம். அதனால் நமது சிக்கல்கள், பிரச்சினை களுக்கு ஒரு முடிவு ஏற்படுகிறது. மகிழ்ச்சியடைகிறோம்.

மோட்சத்தை நோக்கிப் பயனிக்கும் இந்த மானிட வாழ்வில் நமக்கு ஆலோசனைகளை வழங்குவதில் சர்வேசுரனுக்குப் பிறகு, தேவதாய்க்கு நிகரானவர் யார் இருக்கிறார்கள்? ஏனெனில் அவர்களே ஞானத்திற்கு இருப்பிடம். ஞான ஒளியான இஸ்பிரீத்துசாந்து தேவனின் பிரிய பத்தினி அவர்கள். அவர்களது ஆன்மா தேவ ஞானத்தாலும், ஞான ஒளியாலும் சம்பூரணமாய் நிரம்பியிருந்தது.

இத்தகைய அன்னையின் ஆலோசனைகளைக் கேட்டு, அவர்களிடம் சென்ற அரும் பயனடைந்தவர்க்கு அளவேயில்லை. தங்கள் ஜீவிய அந்தஸ்தை தெரிந்துகொள்ள மாதாவிடம் மன்றாடி வாழ்வு பெற்றவர் எத்தனை பேர்! தங்கள் வாழ்க்கைத் துணைவரை அல்லது துணைவியை தேர்ந்தெடுப்பதில் தேவதாயின் உதவி கேட்டு நல்ல கிறீஸ்தவ குடும்பங்களை உருவாக்கினவர்கள் எவ்வளவு பேர்!!

அதுமட்டுமல்லாது ஞானவாழ்வில் சந்தேகங்களால் பீடிக்கப்பட்டு துயருறும் எத்தனை ஆன்மாக்கள் தேவ அன்னையின் ஆலோசனையை நாடியதால் மன அமரிக்கையையும், ஞான வெளிச்சத்தையும் பெற்று தெளிந்தவர் எத்தனை பேர்! மாதாவின் **“மொழி”** கேட்டு அர்ச்சிஷ்டவரானவர்கள் எத்தனை, எத்தனை பேர்!! இதனைத்தான் மாதாவின் மொழியாக உரைக்கும் சர்வப்பிரசங்கி ஆகமம் “...என் மொழி கேட்கிறவர்கள் மோசம் போக மாட்டார்கள்...” (சர்வப்பிரசங்கி 24:30) என்று உரைக்கிறது.

நாமும் இவர்களைக் கண்டுபாவிப்போமாக! நமது சகல உலக, ஞான தேவைகளில் தேவதாயின் ஆலோசனைகளைக் கோரி, அவர்களை அண்டிச் செல்வோமாக! அவர்கள் காட்டும் வழியில் நடந்து வாழ்வு பெறுவோமாக! இதனையேதான் தாய் திருச்சபையும் நமக்கு உரைக்கிறது. நம்மை நல்லாலோசனை மாதாவிடம் வேண்டிக்கொள்ளத் தூண்டுகிறது.

**“நல்லாலோசனை மாதாவே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்!”**

# கத்தோலிக்கக் குடும்பத்தின் மேன்மை

(அமெரிக்காவில், வாஷிங்டனில் உள்ள அர்ச். தமதிரித்துவத்தின் கார்மெல் சபையினர் வெளியிட்ட பிரசுரத்தின் தமிழாக்கம் – ஆசிரியர்.)



*ஏறக்குறைய ஒரு நூற்றாண்டிற்கு முன்பு 1888, ஏப்ரல் 9-ம் தேதி தெரேஸ் மார்டின் என்ற சிறுமி லீசியே நகர் கார்மெல் மடத்தில் பிரவேசித்தாள். அங்கு 9 ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்த அவள் அர்ச்சியசிஷ்டவளாக மரணமடைந்தாள். அந்த 9 ஆண்டுகளில் தான் அர்ச்சியசிஷ்டவளானாளா? இல்லை! 15 வயது மட்டுமே நிரம்பிய அவள் கார்மெல் மடத்துக் கதவுகள் வழியே உள்ளே நுழையும் முன்னரே மோட்சத்திற்குச் செல்லும் நேரிய வழியில் ஒரு குறிப்பிடத்தக்க தூரம் முன்னேறி இருந்தாள். எப்படியெனில் அவள் தன் னுடைய பெற்றோர்களையே முதல் நவசந்நியாச தலைவர்களாகக் கொண்டிருந்தாள். அவர்களின் பரிசுத்ததனம் இந்த எதிர்கால அர்ச்சியசிஷ்டவளிடத்தில் பெரிய தாக்கத்தை - பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. இச்சமயத்தில் அர்ச். குழந்தை சேசு தெரசம்மாளின் பெற்றோர் முத்திபேறு பட்டம் பெற்றவர்கள், விரைவில் அர்ச்சியசிஷ்டப் பட்டமும் பெறவிருப்பவர்கள் என் பதை நினைவில் கொள்வோமாக! அர்ச். தெரசம்மாளின் தாயார் திருமதி. செலி மார்டின் எழுதிய கடிதங்கள் அநேகம் இருக்கின்றன. இக்கடிதங்கள் மார்டின் குடும்பத்தைப் பற்றிய பல தகவல்களைத் தருவதோடு அல்லாமல் அவை கத்தோலிக்கப் படிப் பினை (catholic education) பற்றிய கட்டுரைகளாகவும் திகழ்கின்றன.*

## குழந்தைகள் வளர்ப்பு முறை

கத்தோலிக்கப் படிப்பினை - கத்தோலிக்க வளர்ப்பு என்பது குழந்தைகளை காலை மாலை ஜெபம் செய்ய, பூசைக்குச் செல்ல பழக்குவதும், அவர்களை நல்ல கத்தோலிக்கப் பள்ளிக்கு அனுப்புவதும் மட்டுமல்ல என்பதை திருமதி மார்டின் நன்கு அறிந்திருந்தாள். பிறப்பித்தலால் குழந்தைக்கு சுபாவ உயிரை கொடுத்த பெற்றோர்கள் சுபாவத்திற்கு மேலான உயிரை ஞானஸ்நானத்தின் வழியாக கொடுக்க கருத்தாய் இருக்க வேண்டும். பின்பு அவர்களின் ஆத்தும சரீர வளர்ச்சியைக் கவனிக்க வேண்டும். நல்ல கத்தோலிக்கத் தாயைப்போல திருமதி மார்டின் தன் குழந்தைகளின் ஆத்தும காரியங்களுக்கு முக்கிய இடம் கொடுத்தாள். குழந்தைகள், சர்வேசுரன் தன்னிடம் ஒப்படைத்திருக்கிற பரிசுத்தமான பொக்கிஷம் எனக் கருதினாள். இந்த உண்மையை எப்போதும் தனது மனதில் கொண்டு செயல்பட்டாள்.

ஞானஸ்நானம் என்ற தேவதிரவிய அநுமானம் ஜென்மப் பாவக்கறையை நீக்கினாலும், அதன் 4 வகையான தோஷங்களான அறியாமை, சுயமனதின் பலவீனம், ஆசாபாசங்கள், துன்பதுரிதங்கள் மற்றும் மரணம் என்ற காயங்களை மனிதனின் ஆன்மாக்களில் விட்டுச் சென்றுள்ளது. சிறுபிள்ளைகளின் செயல்களை நாம் கவனித்துப் பார்த்தால் இந்த உண்மை புலப்படும். குழந்தைகள் வளர வளர அவர்களோடு தீய சார்புகளும், குறும்புத்தனமும் வளர்வதை நாம் காண்கிறோம். கோபம், பொறாமை, பிடிவாதம், அகங்காரம் போன்ற தீய மனப்பான்மைகளைக் காணும் பெற்றோர்கள், அவர்களைப் பார்த்து புன்முறுவல் செய்து ஆமோதிப்பது மட்டுமல்லாமல், அதைக் "கெட்டிக்காரத்தனம்" என்று வேறு மெச்சுகிறார்கள். ஆனால் உண்மையில் இப்படிப்பட்ட காரியம் கெட்டிக் காரத்தனம் அல்ல; பிடிவாத குணமோ, அகங்காரமோ புண்ணியமல்ல, மாறாக பாவங்கள். தீயப்பழக்கங்கள் தோட்டத்தில் இருக்கும் களைகளைப் போன்றவை. அவை முளைத்தெழும் போது களையப்பட்டால், அவைகளை சுலபமாக வேரோடு பிடுங்கிவிடலாம். ஆனால் சில வாரங்கள் தோட்டத்தைப் பராமரிக்காமல் விட்டுவைத்தால் என்னவாகும் என்று உங்களுக்குத் தெரிந்திருக்கும். அதுபோல பிள்ளைகள் அவர்களது குழந்தைப் பருவத்திலிருந்து கண்டித்து திருத்தப்பட்டால் அவர்களை புண்ணியத்தில் வளர்ப்பது இலகுவாக இருக்கும். இக்காரியத்தில் அர்ச். குழந்தை சேசு தெரசம்மாளின் தாயார் மிகவும் உறுதியாக இருந்தாள். குழந்தைகளை அவர்களது சொந்த விருப்பு

வெறுப்பிற்கோ அல்லது பிடிவாதத்திற்கோ ஒருபோதும் விட்டுவிடவில்லை. அவள் தனது சகோதரருக்கு, மகள் பவுலின் (பின்னர் சங். சேசுவின் ஆக்னெஸ் தாயார்) பற்றி எழுதிய ஒரு கடிதத்தில்: "அவள் சிறு குழந்தையாய் இருந்தபோதிலும் அவளுக்குச் செல்லம் கொடுத்து கெடுத்தது கிடையாது. சரியில்லாத எதையும் திருத்த தவறியதில்லை. அதே சமயம் பெரும் வருத்தத்தையோ, தண்டனையோ கொடுக்காமல், அவள் கீழ்ப்படியும்படி செய்தேன்" என்று குறிப்பிட்டுள்ளார். சாப்பாட்டு விசயத்தில் சிறு பிள்ளைகள் உணவை விரயம் செய்யக் கூடும். அர்ச். குழந்தை சேசுவின் தெரசம்மாளின் பெற்றோர் இக்காரியத்தில் ஒருபோதும் விட்டுக் கொடுத்ததில்லை. சாப்பாட்டறையில் பிள்ளைகள் ஒழுங்காக நடந்துகொள்ள வேண்டியது; உணவு வகைகளைப்பற்றிய குறை கூறுவது கூடாது என்பது அவர்களது கட்டளை. இக்காரியங்கள் மிகச் சாதாரண மான 'சின்ன விசயமாக' காணப்படுவதால் அநேகப் பெற்றோர்கள் இந்த விசயத்தில் பிள்ளைகளுடைய விருப்பு வெறுப்புகளுக்கு விட்டு கொடுத்து சாக்குச் சொல்லி தப்பித்துக்கொள்ள விரும்புகிறார்கள். ஆனால் இது சாதாரண காரியமல்ல. குழந்தைகளை இதில் பயிற்றுவிப்பது அவ்வளவு சுலபமானதல்ல. இந்த விசயத்தில் உண்ணும் பழக்கம் மட்டுமல்லாமல், குழந்தைகளின் சித்தமும் பயிற்சி பெறுகிறது. தபசு காலத்தில் திருமதி மார்டின் உணவு வகைகளை சிறிது குறைத்து, திருச்சபையின் கட்டளை பிரகாரம் அனைத்து ஒருசந்தி, சுத்தப்போசனக் கடன்களை மிகக் கவனமாக அநுசரிக்கச் செய்தாள். இந்த நல்ல மாதிரிகையை அனைத்து கத். குடும்பங்களும் பின்பற்றுவார்களாக! இப்படிச் செய்வதன் மூலம் குழந்தைகளின் மனதில் மெய்யான ஒறுத்தல் உணர்வுகளை வளர்க்க முடியும். இத்தகைய ஒறுத்தல் முயற்சிகள் குழந்தைகளுடைய வாழ்வில் வெறுப்பை ஏற்படுத்தி, அவர்களது மகிழ்ச்சி யைக் களைந்துவிடும் என்று ஒரு சிலர் மறுப்பு தெரிவிக்கக் கூடும். ஆனால் அப்படி அல்ல! மார்டின் குடும்பம் எப்பொழுதும் சந்தோஷமாக இருந்தது. 5 பெண் மக்கள் மிகவும் கலகலப்புடன் காணப்பட்டார்கள். அங்கே பூரண மகிழ்ச்சி காணப்பட்டது.

திருமதி மார்டின் தன்னுடைய குழந்தைகளு டைய பெருந்தன்மையை, தாராள மனப்பான்மையைத் தூண்டிவிடுவதில் திறமைசாலியாக இருந்தாள். எப்படி யெனில், பாவிகள் மனந்திரும்புவதற்காக, ஆண்ட வருக்கு ஆறுதல் தருவதற்காக போன்ற சுபாவத்திற்கு மேலான கருத்துக்களைச் சொல்லி, அதற்காக தங்கள் கடமைகளைச் செம்மையாகச் செய்து ஒப்புக்கொடுக்கத் தூண்டுவார்கள். தாம் எழுதிய ஒரு கடிதத்தில் தனது மூத்த மகள் மரியா, சமீபத்தில் மரணமடைந்த அவளது தாத்தாவின் ஆத்துமத்திற்கு ஒப்புக்கொடுக்கும் கருத் துக்காக பல்வலியினால் பல்மருத்துவரிடம் தைரியமாகச் சென்றதைக் குறிப்பிட்டுள்ளார். அப்பொழுது அச் சிறு மிக்கு வயது 9 மட்டுமே! பல் மருத்துவர் பல் பிடுங்குதல் போன்ற வலி தரும் காரியம் எதையும் செய்யவில்லையே என்று வருந்தியவள், அப்படியிருந்தால் அந்த வலிகளை யெல்லாம் தன் தாத்தாவின் ஆத்துமத்திற்காக ஒப்புக் கொடுத்திருப்பேனே, அவரும் விரைவில் உத்தரிக்கிற ஸ்தலத்தைவிட்டு விடுவிக்கப்பட்டிருப்பாரே என்று அங்கலாய்த்துப் போன மரியாவைப்பற்றி அக்கடிதத்தில் விவரித்திருந்தார்.

திருமதி மார்டின் வாலிப வயதை அடைந்த தனது புதல்விகளை திறந்த மனதுடன் சுதந்திரமாய் பயம் ஏதுமில்லாமல் பேச அனுமதித்தாள். அவர்களது மனதில் இருப்பது என்னவென்பதை அறிவது முக்கியம் என்று நினைத்தாள். அப்படி அவர்களை நன்கு அறிவதன்மூலம், அவர்கள் பல்வேறு காரியங்களைக் குறித்து ஏதேனும் தவறான கருத்துக்கள், தீர்மானங்களை வைத்திருந்தால், அவைகளை மிகுந்த கனிவுடனும், சாமர்த்தியமாகவும் திருத்தி விசுவாச கண்களுடன் எப்படி அந்த சூழ்நிலை களை, காரியங்களை கையாள்வது என்பதை அவர் களுக்குக் கற்றுக் கொடுத்தாள. அர்ச். குழந்தை சேசுவின் தெரசம்மாளுக்கு முத்திபேறு பட்டம் கொடுக்கப்பட்ட போது தங்கள் தாயாரான திருமதி மார்டினின் வளர்ப்பு முறையை புதல்வியர்கள் பின்வரும் வார்த்தைகளால் புகழ்ந்து கூறினார்கள்: "எங்கள் தாய் எங்களுடைய ஆத்துமங்களை மிக கண்ணும்கருத்து மாகக் கவனித்து வந்தார்கள். மிகச் சிறிய தவறாக இருந்தாலும் அதைத் திருத்தாமல் விடமாட்டார்கள். அவர்களுடைய பயிற்சி சிநேகமும் கனிவும் நிறைந்ததாய் இருந்தது. முழுமை யானதாகவும், கவனம் மிக்கதாயும் இருந்தது!"

(தொடரும்)

## தன் மனம் போல் விடப்பட்ட சிறுவன்!

**ஒருவன் தன் மகனுக்கு தர்ம வழியைக் காட்டாமலும், நன்மாதிரிகை கொடாமலும், அவனை ஞானோபதேசத்திற்கு அனுப்பாமலும் அன்ன வஸ்திரம் கொடுத்து வேலையை மாத்திரம் அவனுக்கு கற்பித்துவந்தான். சிறுவனுக்கு பிராயம் வந்தபின், தன் தகப்பனைத் திட்டிக் கோபித்து, அவமரியாதையாய் நடத்தியதுடன், ஒருநாள் தன் தகப்பன்மட்டில் அதிக கோபங்கொண்டு அவனை கீழே விழத்தாட்டி, அவன் கையைப் பிடித்து பறபறவென்று வெளியே இழுத்துக்கொண்டு போகும் வேளையில், அந்த நிர்ப்பாக்கிய தகப்பன் 'கோ'வென்று அழுது, "அடே மகனே! போதும் நிறுத்து ; நானும் என் தகப்பனை இதற்கு அப்பால் இழுத்துக்கொண்டு போகவில்லை" என்று சொன்னான்.**

# செய்திகள்

## ★ வத்திக்கான் இணைய தளத்தில் (website) லத்தீன்!!

கடந்த மே 9 முதல் வத்திக்கானின் இணையத்தில் லத்தீனிலும் படிப்பதற்கான ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. Sancta sedes என்னும் லத்தீன் பக்கம் ஏற்கனவே அங்கு இருக்கும் ஜெர்மன், இத்தாலியன், ஆங்கிலம், ஸ்பானிஷ் மற்றும் போர்ச்க்கீஸியம் ஆகிய 5 மொழிகளுடன் – ஆறாவது மொழி ஆகிறது.

லத்தீன், திருச்சபையின் அதிகாரபூர்வமான மொழி என்பதையும், அதை மீண்டும் உயரிய இடத்தில் நிலைநிறுத்த, முக்கியமாக குருமடங்களில் கொண்டுவர வேண்டும் என்பதை கடந்த சில ஆண்டுகளாக பாப்பரசர் வலியுறுத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ★ பாப்பரசரின் முதல் சமூக நிருபம் - அக்டோபரில்!

**"சத்தியத்தில் சிநேகம்"** என்ற பாப்பரசரின் மூன்றாவது நிருபம் ஏப்ரல் முன்பாக வெளியிடப்படமாட்டாது என்று கர்தினால் பெர்தோன் ஒரு இத்தாலிய செய்திதாளுக்கு அளித்த ஒரு பேட்டியில் தெரிவித்தார். இந்த நிருபத்தில் சில பகுதிகள் இன்னமும் முடியவில்லை. பாப்பரசர் சமூக பிரச்சினைகளை சுட்டிகாட்டுவதோடு நில்லாமல் அதற்குரிய திருச்சபையின் தீர்வுகளை வழங்கவும் விரும்புகிறார்.

## ★ தூரின் துகில் மீண்டும் பொதுமக்கள் பார்வைக்காக!

கடந்த ஜுன் 2, சுமார் ஏழாயிரம் தூரின் மேற்றிராசன விசுவாசிகளிடம் பாப்பரசர் 16–ம் ஆசீர்வாதப்பர் பேசுகையில், தூரின் துகில் 2010–ல் மீண்டும் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்படும் என்று தெரிவித்தார். கடைசியாக அது ஜுபிலி ஆண்டான 2000–ல் அப்போதைய பாப்பரசர் 2–ம் அருள் சின்னப்பரால் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது.

**திருத்தம்:** சென்ற இதழில் செய்திகள் பகுதியில் அர்ச். சின்னப்பர் "வேதசாட்சியம் அடைந்த ஜுபிலி" என்று தவறாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதை "பிறந்த 2000 வருட ஜுபிலி" என்று திருத்தி வாசிக்கவும்.

### தமிழகத்தில் பாரம்பரிய லத்தீன் திவ்விய பலிபூசை நடைபெறும் இடங்கள்:

**பாளையங்கோட்டை:**
அர்ச். தமத்திரித்துவ ஆலயம்.
தொலைபேசி எண்: 0462 - 2572389, 2586201.

**சிங்கம்பாறை:**
அர்ச். அந்தோணியார் ஆலயம்.
தொலைபேசி எண்: 0462 - 2572389, 2586201..

**கிறீஸ்துராஜபுரம்:**
கிறீஸ்துராஜா ஆலயம்,
தொலைபேசி எண்: 04651 - 294785

**நாகர்கோவில்:**
அர்ச். தோமையார் ஆலயம்.
தொலைபேசி எண்: 0462 - 2572389, 2586201.

**தூத்துக்குடி:**
அர்ச். பிரான்ஸிஸ் சவேரியார் ஆலயம்.
தொலைபேசி எண்: 9942707246.

**ஆசாரிப்பள்ளம்:**
அர்ச். அந்தோணியார் ஆலயம்.
தொலைபேசி எண்: 0462 - 2586201.

**திருச்சி:**
அர்ச். சூசையப்பர் சிற்றாலயம்.
தொலைபேசி எண்: 0431 - 2770042.

**சென்னை:**
அர்ச். அந்தோணியார் மெட்ரிக்குலேஷன் பள்ளிவளாகம்.
தொலைபேசி எண்: 9941353483.
**ஞாயிறு பூசை நேரம் : மாலை 6.00 மணி**

**ஆர். என். கண்டிகை:**
ஜென்ம இராக்கினி ஆலயம்.
தொலைபேசி எண்: 9444122316.

Society of St. Pius X
#1, Marcel Lefebvre Place, Annie Nagar, Seevalaperi Road,
Palayamkottai, Tirunelveli – 627 002.
Ph: 0462-2586201; 2572389. e-mail: sspxindia@gmail.com (or) rajakumar@sspx.com